# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 32

## அறிவிப்புகள்
## 2021 – 2022

**சி.வி. கணேசன்**

தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

## 1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற, சொந்தமாக வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் சொந்தமாக வீட்டு மனை வைத்திருந்தால் அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள நிதி உதவி வழங்குவது அல்லது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற நிதி உதவி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

**2. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையும், மாறிவரும் தொழிற்சாலைகளின் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிட, முன்னணி தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்படும்.**

ஐ.டி.ஐ. முடித்துச் செல்லும் பயிற்சியாளர்கள், தொழில் நிறுவனங்களில் உடனடி வேலைவாய்ப்பு பெறும் வகையில், பயிற்சியின் தரம் உயர்த்திட, அனைத்து ஐ.டி.ஐகளும் புனரமைக்கப்பட்டு, நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் நிறுவப்பட்டு, எதிர்காலத் தேவையினை பூர்த்தி செய்திட புதிய தொழிற்பிரிவுகள் துவங்கப்படும். பயிற்றுநர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் பயிற்சி வழங்கிட தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களையும் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தி, ஐ.டி.ஐ. பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்புகள் பன்மடங்கு உயர்த்தப்படும்.



**3. போட்டித் தேர்வு வகுப்புகளுக்கு கல்வித் தொலைக்காட்சியில் தனி அலைவரிசை**

ஒன்றிய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இந்திய குடிமைப்பணி தேர்வுகள், இந்திய பொறியியல் பணித் தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு தேர்வுகள், Staff Selection Commission நடத்தும் தேர்வுகள், வங்கித் தேர்வுகள், ரயில்வே தேர்வு வாரியம் நடத்தும் தேர்வுகள் என பல்வேறு போட்டித்தேர்வுகளுக்குத் தயாராகும் போட்டித் தேர்வு ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில், கல்வித் தொலைக்காட்சியில் போட்டித் தேர்வுக்கென்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் தனி அலைவரிசையை ஏற்படுத்தி போட்டித் தேர்வுகளுக்கான பாடங்கள் ஒளிபரப்பப்படும். இதற்காக 50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

## 4. தொழில் நிறுவனங்களின் தேவை சார்ந்து வளர்ந்து வரும் தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சி அளித்தல்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில் நிறுவனங்களின் தேவை சார்ந்து வளர்ந்து வரும் தொழில் பிரிவுகளான ரோபோடிக்ஸ், விர்ச்சுவல் ரியாலிட்டி / ஆகுமென்டட் ரியாலிட்டி, கைபேசி செயலி உருவாக்கம், சைபர் பாதுகாப்பு, எத்திக்கல் ஹேக்கிங், கிளவ்டு கம்யூட்டிங், **3D-** அச்சுமுறை, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் திறன் பயிற்சிகளை வழங்கும்.



## 5. 2014, 2015 மற்றும் 2016-ஆம் ஆண்டுகளில், வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை மற்றும் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பதிவினை புதுப்பிக்க ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தை நீட்டித்து வழங்குதல்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, தங்கள் பதிவினை 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறிய சுமார் 48 இலட்சம் பதிவுதாரர்கள் பயன்பெறும் வகையில், சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும்.

2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில், தங்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு, ஏற்கனவே இவ்வரசு பொறுப்பேற்றதற்கு பின், 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. இக்கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்று, புதுப்பித்தல் சலுகை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்து வழங்கப்படும்.

**6. செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதியதாக தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் 36.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

அமைப்புசாரா தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதியதாக தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் மற்றும் அதற்கான பணியிடங்கள் 36.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.



**7. தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதை தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்படும்.**

உணவகம், தேநீர் கடைகள், பேக்கரி மற்றும் அது சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதை தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்படும். இப்பெயர் மாற்றத்தின் மூலம் உணவகத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

**8. கல்வி நலத்திட்ட உதவித்தொகையாக 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை படிக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு கல்வி நலத்திட்ட உதவித்தொகையாக ஆண்டுக்கு 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதனால், சுமார் 10,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.



**9. கட்டுமானத் தொழிலாளர்களின் 10-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை 1,000 ரூபாயிலிருந்து ஆண்டிற்கு 2,400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு கட்டுமானத் தொழிலாளர்களின் 10-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை 1,000 ரூபாயிலிருந்து ஆண்டிற்கு 2,400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 25,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

10. கட்டுமானத் தொழிலாளர்களின் 11-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை 1,000 ரூபாய் மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை 1,500 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, கட்டுமானத் தொழிலாளர்களின் 11-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை 1,000 ரூபாய் மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு



வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை 1,500 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 40,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

**11. கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகையான, முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு 1,500 ரூபாய் மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,750 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகையான, முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு 1,500 ரூபாய் மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படித்தால் 1,750 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 30,000 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.



**12. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

13. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் என்பதை தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்படும்.

தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்த்தல் தொடர்பான தொழில் மற்றும் வணிக வாகனங்களில் பணிபுரியும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேலான அமைப்புசாரா தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம்" என பெயர் மாற்றம் செய்யப்படும்.



14. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6 - ஆம் வகுப்பு முதல் 9 - ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், 6 - ஆம் வகுப்பு முதல் 9 - ஆம் வகுப்பு வரை பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ஆண்டுக்கு 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதனால், சுமார் 10,000 அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

**15. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு 1,500 ரூபாய் மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,750 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற அமைப்புசாரா ஓட்டுநர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு 1,500 ரூபாய் மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,750 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், சுமார் 7 ஆயிரம் பதிவு பெற்ற அமைப்புசாரா ஓட்டுநர் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.



**16. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய ஓட்டுநர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித்தொகை, 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற ஆட்டோ, கார், வேன், டெம்போ, லாரி, பேருந்துகள் மற்றும் இதர வாகனங்களின் ஓட்டுநர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித்தொகை, 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## 17. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய ஓட்டுநர்களுக்கு, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை, 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற ஆட்டோ, கார், வேன், டெம்போ, லாரி, பேருந்துகள் மற்றும் இதர வாகனங்களின் ஓட்டுநர்கள், இயற்கையாக மரணம் அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை, 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.



## 18. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 85,000 ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பு பெட்டகம் வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 85,000 ஆட்டோ, கார், வேன், டெம்போ, லாரி, பேருந்துகள் மற்றும் இதர வாகன ஓட்டுநர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், முதலுதவிப்பெட்டி, சீருடை மற்றும் ஷூ (Shoes) அடங்கிய தலா 1500 ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு பெட்டகம் 12.75 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**19. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6 - ஆம் வகுப்பு முதல் 9 - ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகையாக, 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் 6 - ஆம் வகுப்பு முதல் 9 - ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகையாக, ஆண்டுக்கு 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதனால், சுமார் 10,000 தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.



**20. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களின் தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்படும் விபத்து மரண உதவித்தொகை, 1 இலட்சம் ரூபாயிலிருந்து 1.25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள், விபத்து மரணம் அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்படும் விபத்து மரண உதவித்தொகை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 1.25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**21. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களின் தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை, 20,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடையும் நேர்வில், குடும்ப தலைமையை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு, அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை 20,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்



**22. விழுப்புரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.**

விழுப்புரம் மாவட்டத்தில், தொழிலாளர் துறை மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவதால் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம் 3.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**23. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு புதியதாக 7 பணியிடங்கள் உருவாக்கப்படும்.**

அம்பத்தூரில் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய நிர்வாகக் கட்டடம், விடுதி மற்றும் வளாகத்தை பராமரிக்கவும் மற்றும் பாதுகாத்திடவும் புதியதாக 7 பணியிடங்கள் (ஆண் மற்றும் பெண் வார்டன், காவலர்கள், எலக்ட்ரீசியன், பிளம்பர் மற்றும் தோட்டக்காரர்) 18.70 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.



**24. மாநிலத்தில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் சிறந்த மாவட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலருக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்படும்.**

மாவட்டங்களின் தொழில் துறை திறன் தேவைக்கேற்ப மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை சிறப்பாக வடிவமைத்து செயல்படுத்தும் மாவட்டங்களை ஊக்குவிக்கும் விதமாக ஆண்டுதோறும் மூன்று சிறந்த மாவட்டங்களை தேர்வு செய்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்களை கௌரவிக்கும் வகையில் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஆண்டுதோறும் 3.75 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

**25. அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்தவர்களில் ஒரு இலட்சம் நபர்களுக்கு பணித் திறன் மற்றும் அனுபவத்தை அங்கீகரித்து திறன் மதிப்பீடு செய்து உரிய சான்றிதழ் வழங்கப்படும்.**

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து, போதிய பணித்திறன் மற்றும் அனுபவம் இருந்தும் உரிய சான்றிதழ் இல்லாமல் குறைவான ஊதியம் பெறும் நிலையில் இருக்கும், ஒரு இலட்சம் நபர்களை கண்டறிந்து அவர்களின் திறனை மதிப்பீடு செய்து உரிய திறன் சான்றிதழ்கள் (RPL - அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல்) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்படும். இதனால் அரசுக்கு சுமார் 10.00 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.



**26. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பல்வேறு துறைகளில் திறன் பயிற்சி பெற்றவர்களின் விவரங்களை ஒருங்கிணைக்க, ஒருங்கிணைந்த ஒற்றை திறன் பதிவு தொகுதி உருவாக்கப்படும்.**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பல்வேறு தொழில் பிரிவுகளில் நடத்தப்படும் திறன் பயிற்சி மற்றும் தமிழ்நாடு அரசின் பிற துறைகளில் நடத்தப்படும் திறன் பயிற்சிகளில், பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்ற அனைவரின் சுய விவரங்கள் அடங்கிய திறன் பதிவு தொகுதியாக (Skill Registry) இத்தளம் செயல்படும். ஒருங்கிணைந்த ஒற்றை திறன் பதிவு தொகுதி (Unified Single Skill Registry) உருவாக்கப்படும். தொழில் துறையினரின், திறன் பெற்றவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இத்திறன் தொகுப்பு மையம் செயல்படும்.

## 27. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக இணையவழி செயல்பாடுகளில் மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகளை ஏற்படுத்துதல்.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் தற்போதைய வலைதளம் எதிர்காலத் தேவைகளுக்கேற்றவாறு மாற்றியமைக்கப்பட்டு, புதிய இணைய வழி சேவைகள் அறிமுகப்படுத்தப்படும். இணைய வழி சேவைகளை வழங்குவதற்காக புதியதாக ஒரு கைபேசி செயலி உருவாக்கப்படும். இவ்வசதிகள் 1.73 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும்.



## 28. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு இரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்து பயிற்சி வழங்குதல்.

பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் முதலீட்டினால், புதிய தொழில்நுட்பங்களும், செயல்முறைகளும் நமது நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. அபாயகரமான இரசாயனங்களை பயன்படுத்தி பல நவீன உற்பத்தி செயல்முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இச்செயல்முறைகளினால், பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்படைய வாய்ப்புள்ளது. சமீபத்திய தொழில்நுட்ப மேம்பாடுகளையும், உலகத் தர பாதுகாப்பு உத்திக்கான பாதுகாப்பு வல்லுநர்களைக் கொண்டு, இயக்கக அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து ஆய்வின் தரத்தை மேம்படுத்துவதுடன் தொழிற்சாலை பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இப்பயிற்சி 25 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

## 29. அக வளாக / புற வளாக அவசர கால ஆயத்தநிலை மாதிரி ஒத்திகை குறித்த குறும்படம் தயாரித்தல்.

தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துகள், தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தை பாதிப்பதுடன் சமூகத்திற்கும் பெரும் கேடுவிளைவிக்கிறது. தொழிற்சாலை மற்றும் தொழிலாளர்களிடையே உள் மற்றும் வெளி ஆயத்த ஒத்திகை, தீ தடுப்பு மற்றும் சுய பாதுகாப்பு சாதனங்கள் குறித்த பாதுகாப்பு குறும்படங்கள் மிகப்பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

தமிழ்நாடு அரசின் சார்பாக இக்குறும்படங்களை சிறப்பான முறையில் தயாரித்து, வெளியிட்டு, பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், பாதுகாப்பான சூழலை உருவாக்கலாம். இக்குறும்படம் 30 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்படும்.



## 30. திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம் மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுதல்.

திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையம் மற்றும் திருநெல்வேலி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் இயங்கிவரும், திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு, திருநெல்வேலியில் ஒருங்கிணைந்த சொந்த அலுவலக வளாக கட்டடம் கட்டப்படும்.

**31. செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய 5 மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைத்தல்.**

புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், வேலைநாடுநர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் புதியதாக அமைக்கப்படும்.



**32. மாவட்ட அளவில் திறன் பயிற்சித் திட்டங்களை செயல்படுத்திட திறன் பயிற்சி அலுவலகங்கள் இல்லாத 8 மாவட்டங்களில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் துவங்கப்படும்.**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை விதிமுறைகளின்படி செயல்படுத்திடவும், திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சிகளை கண்காணிக்கவும், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் இல்லாத அரியலூர், திருவாரூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை ஆகிய 8 மாவட்டங்களில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் புதியதாக துவங்கப்படும்.

**33. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில் கணினி மயமாக்கல் மூலம் திட்டங்களை கண்காணித்திடவும், மின் ஆளுமை மூலம் நிர்வாகப் பணிகளை செயல்படுத்திடவும், தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு அமைப்பு ஏற்படுத்தப்படும்.**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவு, தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு இளைஞர்களை திறன் பெற்றவர்களாக மாற்றியமைக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் அனைத்தையும் திறம்பட செயல்படுத்துவதை கண்காணிக்கவும், நிர்வகிக்கவும் தலைமை அலுவலகத்திலும், மண்டல அளவிலும் தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு அமைப்பு ஏற்படுத்தப்படும்.



**34. தேசிய திறன் தகுதி கட்டமைப்பிற்கு ஏற்றவாறு பயிற்சியளித்திடவும், தொழிற்பயிற்சி நிலையங்களை நிர்வகித்திடவும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில் உள்ள சில பணியிடங்களை மறு சீரமைத்தல்.**

தொழிற்பயிற்சி நிலையங்கள், தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழும (National Council for Vocational Education and Training) நெறிமுறைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது, தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் கீழ் மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில் உள்ள தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியிடங்களை மாற்றியமமைப்பதன் மூலம்,

இளைஞர்களுக்கு திறம்பட பயிற்சி அளித்திடவும், நிர்வாகப் பணிகளை திறம்பட நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்படும்.

**சி.வி. கணேசன்**
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்